**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 76/2025 |
| Deposition of Witness | : | PW- 4 |
| Name | : | பிரகாஷ் |
| Father Name | : | ராமசாமி |
| Village | : | சிவியார்பாளையம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 36 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 24.07.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவியார்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். ஆர்எஸ் வேர்கவுசில் சூப்பர் வைசராக வேலை செய்து வருகிறேன். கடந்த 21.01.2025 ஆம் தேதியன்று மாலை 5.30 மணியளவில் திட்டுப்பாறை பேருந்து நிலையம் அருகில் நின்றுகொண்டிருந்தபோது காங்கேயம் – சென்னிமலை ரோட்டில் இருசக்கர வாகனம் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்துது. மேற்படி ரோட்டில் காரானது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. இருசக்கர வாகனத்தில் வந்தவர் கீழே விழுந்துவிட்டார். அவரது காலில் இரத்தக்காயம் ஏற்பட்டிருந்தது. நான் சென்று விசாரித்தபோது அவரது பெயர் கண்ணன் என்று கூறினார். அவரை தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சைக்கு சேர்த்தேன். பின்னர் மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். பின்னர் விபத்து குறித்து அவரது உறவினர்களுக்கு தகவல் கொடுத்தேன். சிகிச்சையில்

இருந்தவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். சம்பவத்தின்போது கார் ஓட்டிவந்த நபரை பார்த்தேன். தற்போது பார்த்தால் அவரை அடையாளம் தெரியும். ஆஜர் எதிரிதான் விபத்து சமயம் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஆவார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

விபத்தில் இறந்த கண்ணன் எனக்கு சகோதரர் முறையாவார். எனது சித்தப்பா மகன் ஆவார். அவருக்கு திருமணம் முடிந்து தாரணி என்ற மனைவி உள்ளார் என்றால் சரிதான். அவருக்கு சர்வேஷ்வரன் என்ற மகனும் உள்ளார். விபத்து சமயத்தில் திட்டுப்பாறையில் உள்ள டீ கடையில் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். டமார் என்ற சத்தம் கேட்டு 5 நிமிடம் கழித்து சென்று பார்த்தேன் என்றால் சரிதான். அங்கு சென்று பார்த்த பின்னர்தான் எனது தம்பி கண்ணன் என்ற தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். விபத்தில் இறந்த கண்ணனின் மனைவி மற்றும் அவரது அப்பா எதிரியிடம் இருந்து ரூ.7,00,000/- நஷ்ட ஈடாக பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். விபத்தில் இறந்த கண்ணன்தான் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்து எதிரே வரும் வாகனத்தை கவனிக்காமல் திடீரென வலது புறமாக திரும்பி வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. வாகன விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.07.24 13:55:03 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்